மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான


# முன்னோடிப் பரீட்சை - இல-01

## வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................


நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  - இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
  - ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  - செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

(01) 

இத்திண்மம் புள்ளிக்கோடுகளின் வழியே சமனான இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, வெட்டப்பட்ட ஒரு பக்கத் துண்டிலுள்ள முகங்களின் எண்ணிக்கை,



(1) 2 (2) 3 (3) 4


(02) 

இக்கடதாசிக் கீலத்தை விரிக்கும்போது மடிந்த இடங்களைச் சரியாகக் காட்டும் உரு,




(1)  (2)  (3) 

(03) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் முதல் உருவுக்குச் சகல விதத்திலும் சமனான உருவைத் தெரிவு செய்க.

 (1)  (2)  (3) 

(04) 


இக்குறியீடுகளின் மீது மையைப் பூசி அக்குறியீடுகளின் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக்கோட்டின் வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும்போது கிடைக்கும் உரு,

(1)  (2)  (3) 



(05) பின்வரும் வினாவில் முதல் கூண்டினுள் தரப்பட்டுள்ள எண்களின் பெறுமதிக்குப் பதிலாகப் பிரதியீடு செய்யக்கூடிய எண்களைக் கொண்ட கூண்டைத் தெரிவு செய்க.


$\boxed{4 \times 3} + 6 = 18$

(1) $\boxed{9 \times 2}$ (2) $\boxed{20 - 8}$ (3) $\boxed{7 + 6}$

(06) 

இக்கார்ட்போர்ட் துண்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதனால் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 


(07) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது முக்கோண வடிவத்தினுள் உள்ள ஒரேயளவான 9 வட்ட வடிவங்களை ஆகும். இம்முக்கோண வடிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு இன்னும் தேவைப்படும் வட்ட வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 7 (2) 6 (3) 5


(08) தினேஷின் தந்தை எனது அண்ணன் எனின், நான் தினேஷின்,

(1) சகோதரன் (2) தம்பி (3) சித்தப்பா

(09) 



மேலே எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எழுத்து,

(1) K (2) H (3) L

(10) 


இக்கடிகார முகம் எப்பொழுதும் சரியான நேரத்தை விட 10 நிமிடங்கள் குறைவாகக் காட்டும். அதன்படி, தற்போது சரியான நேரம்,

(1) 8.05 (2) 7.45 (3) 8.00




(11) 

இவ்வுரு ஒரேயளவான 4 சிறிய சதுர வடிவங்களினால் ஆனது. அதன்படி, இவ்வுருவில் காணப்படும் மொத்த செவ்வக வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6


(12) 


மேலே காட்டப்பட்டுள்ளது வட்ட வடிவக் கடதாசியொன்றை நான்காக மடித்து துளையிடப்பட்டுள்ள முறையையாகும். அதன்படி, அக்கடதாசித் துண்டை விரித்தால் காணக்கிடைக்கும் முறை,

(1)  (2)  (3) 


(13) 100 இலிருந்து 110 வரையான இலக்கங்களை எழுதும்போது, இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 13 (2) 12 (3) 14

(14) 

இக்குறியீடுகள் 10 இற்கும் குறைந்த எண்களைக் காட்டுகின்றன. அதன்படி, வட்ட வடிவக் குறியீட்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 7 அல்லது 8 (2) 2 அல்லது 3 (3) 5 அல்லது 6

(15) 



இத்தராசு சமநிலையுடையது. அதன்படி, சீனியின் நிறை,

(1) 3kg
(2) 2kg
(3) 4kg

(16) ரவி குறித்த வரிசையொன்றில் நின்றுகொண்டிருந்தான். அவ்வரிசையில் ரவிக்கு முன்னால் நின்றுகொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையும் ரவிக்குப் பின்னால் நின்றுகொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையும் சமனாகும். அதன்படி, அவ்வரிசையில் நின்றுகொண்டிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கையாக இருக்கக்கூடியது,

(1) 18 (2) 21 (3) 14

(17) முதலில் தரப்பட்டுள்ள உருக்கள் மூன்றிற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருவைத் தெரிவு செய்க.




(1)  (2)  (3) 

(18) நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அவ்வெண்ணில்,

* இரண்டாவது இலக்கத்தினதும் நான்காவது இலக்கத்தினதும் கூட்டுத்தொகை 9 ஆகும்.
* முதலாவது இலக்கம் மூன்றாவது இலக்கத்தைப் போல் மூன்று மடங்காகும்.

அதன்படி அவ்வெண்,


(1) 6326 (2) 3594 (3) 3713

(19) 


இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது ஒருபக்க நீளம் 8cm ஆகவுள்ள சதுர வடிவக் கம்பிச் சட்டகம் ஒன்றாகும். கறுப்பு எறும்பொன்று E யிலிருந்து A இனூடாக B வரை பயணித்தது. சிவப்பு எறும்பொன்று E யிலிருந்து D மற்றும் C இனூடாக B வரை பயணித்தது. அதன்படி, இரண்டு எறும்புகளும் பயணித்த மொத்தத் தூரம்,

(1) 32cm (2) 24cm (3) 36cm

*** பின்வரும் கூண்டினுள் உள்ள உருக்களின்படி, இலக்கம் (20), (21) ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**





(20) விவசாயத்தின்போது பயன்படுத்தப்படும் உபகரணங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) F, D, G (2) B, G, F (3) E, H, D

(21) மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) A, E, I (2) G, C, H (3) B, D, H

சுட்டெண்:........................................

(22) 

பல சதுரமுகிகள் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, இக்குவியலில் வைக்கப்பட்டுள்ள மொத்த சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 12 (2) 14 (3) 15

(23) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

புத்தகத்தை எடுப்போம்
புதிய பாடம் படிப்போம்
..................................... காப்போம்
பையில் அதனை வைப்போம்

இப்பாடலின் வெற்றிடத்திற்கு வரவேண்டிய சொல்,

(1) காத்திரமாக (2) சுத்தமாக (3) பத்திரமாய்

(24) பின்வரும் கோலத்தின்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**Z , YZ , XYZ , WXYZ, .................**


(1) **UWXYZ** (2) **VWXYZ** (3) **TWXYZ**

(25) ஒக்டோபர் மாதமொன்றில் திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்கள் ஐந்து வீதம் உள்ளன. இக்கூற்று,

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது

(26) பிள்ளையொன்று இரு கைகளையும் இரு பக்கங்களுக்கும் விரித்தவாறு வடகிழக்குத் திசைக்குப் பயணித்தது. அதன்படி, அப்பிள்ளையின் வலது கை திரும்பியிருப்பது,

(1) தென்கிழக்குத் திசைக்கு (2) தென்மேற்குத் திசைக்கு (3) வடமேற்குத் திசைக்கு

(27) 

இவ்வுருவில் $\frac{6}{9}$ பங்கை விட அதிகமாக நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்பட வேண்டிய மிகக் குறைந்த சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 4 (3) 3

(28)

3 8 13
8 13 18
13 18 .......

இங்கு இலக்கங்கள் ஏதோவொரு கோலத்திற்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான இலக்கம்,

(1) 23 (2) 26 (3) 22

(29) P எனும் எண்ணிலிருந்து 6 ஐக் கழிக்கும்போது விடை 15 ஆகும். அதன்படி, P எனும் எண்ணுடன் 4 ஐக் கூட்டினால் கிடைக்கும் விடை,

(1) 22 (2) 25 (3) 17

(30)


**A** = புகையிரதம் - கப்பல் - ..............................

**B** = பத்திரிகை - தொலைக்காட்சி - வானொலி

**C** = தேனீ - வீட்டு ஈ - ..............................

மேற்படி A, C வரிசைகளின் இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான சொற்கள் முறையே,


(1) கடல், யானை (2) பாதை, மலர் (3) விமானம், நுளம்பு

(31) 

மேலே உரு வரிசையில் சமச்சீர் கோடுகள் வரைய முடியாத உருக்களின் எண்ணிக்கை,

(1) 3 (2) 2 (3) 4


(32)




இவ்வுருவிலுள்ள எண்களைக் கிடையாகவும், நிலைக்குத்தாகவும் கூட்டும்போது ஒரே விடை கிடைக்கும் வண்ணம் வட்டம் Z இற்குப் பொருத்தமான எண்,

(1) 5 (2) 6 (3) 4

(33)




இவ்வுரு அமைக்கப்பட்டுள்ளது ஒரேயளவான 5 சிறிய செவ்வக வடிவங்களினாலாகும். அவ்வொரு சிறிய செவ்வக வடிவத்தின் நீளம் அதன் அகலத்தின்,


(1) இரண்டு மடங்காகும்.


(2) நான்கு மடங்காகும்.

(3) மூன்று மடங்காகும்.

*** சில பொருட்களினுடைய விலைகளின் கூட்டுத்தொகைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.**


→ **ரூபா 50.00**


→ **ரூபா 40.00**


→ **ரூபா 30.00**

**மேற்படி விலைகளின்படி, இலக்கம் (34), (35) ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

(34) பேனையொன்றின் விலை,

(1) ரூபா 30.00 (2) ரூபா 20.00 (3) ரூபா 25.00

(35) அடிமட்டமொன்றின் விலை,

(1) ரூபா 10.00 (2) ரூபா 15.00 (3) ரூபா 20.00

(36) 1978 ஆம் வருடம் உரித்துடையது,

(1) 21 ஆம் நூற்றாண்டின் 8 ஆம் தசாப்தத்திற்கு

(2) 20 ஆம் நூற்றாண்டின் 8 ஆம் தசாப்தத்திற்கு

(3) 20 ஆம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தத்திற்கு

(37) எனக்கு இரு அக்காக்களும் மூன்று தம்பிகளும் உள்ளனர். அதன்படி, எனது அம்மாவிற்கு உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 7 (3) 6

(38) தற்போது ரமேஷின் வயது 8 வருடங்களாகும். தற்போது கணேஷின் வயது 5 வருடங்களாகும். இன்னும் மூன்று வருடங்களில் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை,

(1) 19 வருடங்கள் (2) 16 வருடங்கள் (3) 20 வருடங்கள்

(39)

| 12 பந்துகள் | 6 பந்துகள் |
|---|---|
| **A** | **B** |

A, B ஆகிய இரண்டு பெட்டிகளினுள்ளும் உருவில் காட்டியுள்ள முறைப்படி பந்துகள் உள்ளன. பெட்டிகள் இரண்டிலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமனாவதற்கு,

(1) B பெட்டியிலிருந்து A பெட்டிக்கு 2 பந்துகள் இட வேண்டும்.

(2) A பெட்டியிலிருந்து B பெட்டிக்கு 3 பந்துகள் இட வேண்டும்.

(3) A பெட்டியிலிருந்து B பெட்டிக்கு 6 பந்துகள் இட வேண்டும்.

(40) விலங்குப் பண்ணையொன்றில் வளர்க்கப்படும் கோழிகளின் தலைகளின் எண்ணிக்கையினதும், கால்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகை 39 ஆகும். அதன்படி, அப்பண்ணையில் வளர்க்கப்படும் கோழிகளின் எண்ணிக்கை,

(1) 13 (2) 15 (3) 11

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021
தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-01
# வினாத்தாள் - II

சுட்டெண் :- ...................................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

**● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
*** இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
*** எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
*** விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
*** செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

**(01) பின்வரும் பந்தியை வாசிக்குக.**

இப்பண்டிகையின்போது நத்தார் தாத்தா வந்து பரிசுகள் வழங்கி எம்மைப் போன்ற சிறுவர்களை மகிழ்விப்பார். அன்றைய தினம் புத்தாடை அணிந்து நாம் தேவாலயத்திற்குச் சென்று வழிபடுவோம். உற்றார் உறவினர்களுக்கு நத்தார் கேக், பாற்சோறு மற்றும் இனிப்புப் பண்டங்கள் கொடுத்து மகிழ்வோம்.

(1) பந்தியிலுள்ள இணைமொழி ஒன்றினை எழுதுக. ..............................................................

(2) பந்தியிலுள்ள உயர்திணை, தன்மை, பன்மைச் சொல்லை எழுதுக. ..............................................

(3) விசிறியும் கீழ்க்காலும் வந்துள்ள சொல்லை பந்தியிலிருந்து எழுதுக. ........................................

(4) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டிகையைக் கொண்டாடும் சமயத்தவர்கள் யார்? ........................

(5) "நாள்" எனும் பொருளைத் தரும் சொல்லை எழுதுக. ..............................................................

**(02) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் ( ✓ ) எனவும், பிழையாக எழுதப்பட்டிருப்பின் ( X ) எனவும் வாக்கியத்திற்கு எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.**

(1) வேகமாக வீசிய காற்றினால் பெரிய மரங்கள் சரிந்து விழுந்தன. ( )

(2) சிங்கம் மான்களின் பின்னே வேகமாக ஓடின. ( )

(3) காலை வேளையில் சூரியன் கிழக்கில் உதித்தது. ( )

**(03) பின்வரும் பழமொழியின் மீதிப் பகுதியினைப் பூரணப்படுத்துக.**

அளவுக்கு மிஞ்சினால் ..............................................................

**(04) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

உழவன் வயலை உழுதான். :- ..............................................................

**(05) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

நிழலில் / ஒரு / வியாபாரி / தொப்பி / இளைப்பாறினார் / மர

..............................................................

**(06) பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

வீதியில் விளையாட வேண்டாம் என அப்பா கூறினார்

**(07) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(1) அம்மா செய்த ............................ (சிற்றுண்டி / சிற்றுன்டி) சுவையாக இருந்தது.

(2) மழை வெள்ளம் எங்கும் ......................... (பரந்து / பறந்து) பாய்ந்தது.

**(08) பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக.**

* குயவன் களிமண்ணை எடுத்தான். * குயவன் குடத்தை வனைந்தான்.

..............................................................

**(09) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.**

(1) கள்ளங்.............................................. (2) கையும்..............................................

(10) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(1) புராதன சின்னங்களைப் பாதுகாப்பாக வைக்கும் இடம் :- ..............................................


(2) மற்றவர்களைப் பற்றிய அக்கறை இல்லாதவன் :- ..............................................

**(11) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

(1) Nose :- .............................. (2) Knife :- ..............................

**(12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(1)  :- ..............................................

(2)  :- ..............................................


**(13) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

(1) have / red / I / a / beak :- .............................................. (2) this / What / animal / is :- ..............................................

(14) "ரோஹல" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக. ..............................................


(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

எனது பெயர் சமன். :- ..............................................

(16) 

இவ்வெண்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணைச் சொற்களில் எழுதுக.


..............................................


(17) 
இவ்வுருவின் 0.7 ஐ நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்பட வேண்டிய சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை யாது? ..............................................

(18) "பத்தொன்பது" எனும் எண்பெயருக்குப் பொருத்தமான உரோம எண்குறிகளை எழுதுக. ..............................................

(19) கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரையிலான ஒழுங்கில் (இறங்குவரிசையில்) எழுதுக.

5760 , 5940 , 5297 , 5806 :- ..............................................

(20) 
இக்கார்ட்போர்ட் துண்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. ..............................................

(21) 

இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு $\frac{1}{2}$ மணித்தியாலத்தின் பின்னரான நேரத்தை எழுதுக. ..............................................

(22)

| | | | |
|---|---|---|---|
| 28 | 40 | 21 | |
| 42 | 35 | 20 | 19 | 36 |

இக்கூண்டினுள் உள்ள எண்களில் 4 இன் மடங்குகளைத் தெரிவுசெய்து எழுதுக.

..............................................

(23) (1) 18100 இற்கு முன்னுள்ள எண்ணை எழுதுக. .............................. (2) 8999 இற்குப் பின்னுள்ள எண்ணை எழுதுக. ..............................

(24) பின்வரும் எண்கோலங்களின் வெற்றுக்கூண்டுகளுக்குப் பொருத்தமான எண்களை வெற்றுக்கூண்டுகளினுள்ளேயே எழுதுக.


(1) 2 , 7 , 12 , 17 , [ ] (2) 1 , 4 , 9 , 16 , 25 , [ ]

(25)

| | | | |
|---|---|---|---|
| | 4 | | 2 |
| 8 | | 9 | | 6 |

இக்கட்டத்திலுள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

..............................................

(26) 

19:30 எனும் நேரத்தை இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.
(மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றைத் தெளிவாக வரைக.)

(27) அரிசிச் சாக்கொன்றின் நிறை 15kg 500g ஆகும். அத்தகைய 4 அரிசிச் சாக்குகளின் நிறை யாது? ..............................

**(28) ஒரு பூரணமற்ற சிட்டை கீழே தரப்பட்டுள்ளது.**


| | பொருட்களின் வகைகள் | ஒன்றின் விலை(ரூபா) | கொள்வனவு செய்த அளவுகள் | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | சதம் |
| 1. | மாங்காய் | 10.00 | .......... | 60 | 00 |
| 2. | கொய்யா | .......... | 4 | 24 | 00 |
| 3. | தோடை | 15.00 | 3 | .......... | .......... |
| | | 4. | கூட்டுத்தொகை | .......... | .......... |

(1) சிட்டையிலுள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக.

சுட்டெண்:-........................................

(2) மேலேயுள்ள பழ வகைகளைக் கொள்வனவு செய்த பின் வியாபாரிக்கு ரூபா 50.00 நாணயத்தாள்கள் 3 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ................................................

(29)




இவ்வுருவின்படி, P இனால் காட்டப்பட்டுள்ள திசையை எழுதுக.

..............................................................................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது சூரிய நமஸ்காரப் பயிற்சியின்,

(1) 1 ஆவது சந்தர்ப்பம் (2) 2 ஆவது சந்தர்ப்பம் (3) 3 ஆவது சந்தர்ப்பம்

(31) "பருந்து" காட்டப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 

(32) கோழி,

(1) தாவர உண்ணிப் பிராணி (2) அனைத்துமுண்ணிப் பிராணி (3) ஊன் உண்ணிப் பிராணி

(33) சோறின் மூலம்,




(1) உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்கும். (2) உடல் வளர்ச்சியடையும்.

(3) உடல் நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறும்.

(34) முதலை,

(1) நீரில் மட்டும் வாழும் பிராணி (2) நிலத்தில் மட்டும் வாழும் பிராணி (3) நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி

(35) "வட்டக்கண்ணி" தாவரத்தின் இலை காட்டப்பட்டுள்ள உரு,

(1) 
(2) 
(3) 

(36) ஏப்ரல் மாதத்தில் பூக்கும் பூ வகை,

(1) முள்முருங்கைப் பூ (2) கமுகுப் பூ (3) மல்லிகைப் பூ

(37) 10 கால்களைக் கொண்ட பிராணி,

(1) மரவட்டை (2) தேள் (3) இறால்

(38) 

இவ்விலங்கைத் தேசப்படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது,


(1) வடமேல் மாகாணம்

(2) மேல் மாகாணம்

(3) சப்ரகமுவ மாகாணம்

(39) வீதிச் சமிக்ஞை தூண்களில் "முன்னால் செல்க" எனும் கருத்தை வெளிப்படுத்தும் வர்ணம்,

(1) பச்சை (2) செம்மஞ்சள் (3) சிவப்பு

(40) 


அருகே நகரமொன்றின் பிரதான சந்தியொன்றில் காணக்கிடைக்கும் வீதிச் சமிக்ஞைத் தூணொன்று காட்டப்பட்டுள்ளது. இதில் A, B, C என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள வர்ணங்கள் முறையே,

(1) பச்சை , சிவப்பு , செம்மஞ்சள்

(2) சிவப்பு , செம்மஞ்சள் , பச்சை

(3) செம்மஞ்சள் , பச்சை , சிவப்பு

(41) தாதுசேன மன்னனால் கட்டப்பட்ட குளம்,

(1) கலாவாவி (2) மின்னேரியா வாவி (3) பராக்கிரம சமுத்திரம்



(42) "பொசொன்" பண்டிகை கொண்டாடப்படுவது,

(1) கிறிஸ்தவ சமயத்தவரால் (2) இந்து சமயத்தவரால் (3) பௌத்த சமயத்தவரால்

(43) இலங்கையின் தலைநகரம் அமைந்துள்ளது,

(1) தென் மாகாணத்தில் (2) மேல் மாகாணத்தில் (3) வடமேல் மாகாணத்தில்

(44) "வயலின்" காட்டப்பட்டுள்ள உரு,

(1) 
(2) 
(3) 

(45)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள தேசிய வீரர்,



(1) கலாநிதி ரீ. பீ. ஜாயா (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

(3) கலாநிதி சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா

(46) ஒரு குழுவில் 6 வீரர்கள் வீதம் விளையாடப்படுவது,

(1) வலைப்பந்து (2) கரப்பந்தாட்டம் (3) எல்லே

(47) மின்குமிழ் ஒன்று செப்புக்கம்பியின் மூலம் உலர்மின்கலம் ஒன்றிற்கு இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அம்மூன்று சந்தர்ப்பங்களிலும் மின்குமிழ் ஒளிராத சந்தர்ப்பம்,

(1)  (2)  (3) 

(48) மின்காந்தமொன்றை அமைக்கத் தேவைப்படுபவை,

(1) காந்தக்கோல் , உலர்மின்கலம் , செப்புக்கம்பி (2) மின்குமிழ் , காந்தக்கோல் , செப்புக்கம்பி

(3) உலர்மின்கலம் , செப்புக்கம்பி , இரும்பு ஆணி

(49) பல்லி தனக்குத் தேவையான இரையைப் பிடித்துக்கொள்வது,

(1) நாவினால் (2) வாலினால் (3) கால்களினால்

(50) தேசியக் கொடியில் காணக்கிடைக்கும் மூல வர்ணம்,

(1) பச்சை (2) மஞ்சள் (3) செம்மஞ்சள்

(51) 5 மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்,

(1) வட மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) வடமேல் மாகாணம்

(52) புரதச்சத்து அதிகம் அடங்கியுள்ள உணவு வகை,

(1) வற்றாளை (2) தோடை (3) கருவாடு

(53) கோழியின் கால் காட்டப்பட்டுள்ள உரு,

(1)  (2)  (3) 

(54)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள பூச்சி,

(1) கும்பிடுபூச்சி (2) குளவி (3) இராமபாணம்

(55) "அச்சாறு" இட்டு வைக்கப் பொருத்தமற்ற பாத்திரம்,

(1) மண் பாத்திரம் (2) அலுமினியப் பாத்திரம் (3) பிளாஸ்டிக் பாத்திரம்

(56) ஆணிவேர்த் தொகுதியைக் கொண்டிராத தாவரம்,

(1) பனை (2) பப்பாசி (3) வேம்பு

(57) நீதிமன்றம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு அருகில் காணக்கிடைக்கும் வீதிச் சமிக்ஞை,

(1)  (2)  (3) 

(58) தேசியக் கொடியிலுள்ள பச்சை நிறம் பிரதிநிதித்துவப்படுத்துவது,

(1) தமிழ் இனத்தவர்களை (2) முஸ்லிம் இனத்தவர்களை (3) சிங்கள இனத்தவர்களை

(59) கடுபுல் தாவரத்தில் பூக்கள் பூப்பது,

(1) தண்டில் (2) இலைகளில் (3) கிளைகளில்

**(60) "நான் கூட்டில் வளரும் ஒரு கிளியாக இருந்தால்........" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................